# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2022 சனவரி

## (204) வணிக முகாமைத்துவம்

இவ்வினாத்தாள் **A, B, C** என 3 பகுதிகளையும் 07 வினாக்களையும் கொண்டுள்ளது.

**பகுதி A**

**வினா இல. 01**

வினா இல. 1 ஆனது பதினைந்து (15) OTQs இனைக் கொண்டிருப்பதுடன் அது வணிக முகாமைத்துவப் பாடத்திட்டத்தின் சகல பகுதிகளையும் உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டிருந்தது.

இல. **1.1** தொடக்கம் **1.5** வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து, தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை விடைப்புத்தகத்தில் எழுதுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடைகளைத் தெரிவு செய்திருந்தனர். பாடம் தொடர்பில் சரியான புரிதலைக் கொண்டிராத சில பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெறுவதில் மோசமான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருந்தனர்.

இல. **1.6** தொடக்கம் **1.10** வரையான வினாக்களைப் பொறுத்தவரையில், அங்கு அடைப்புக்குறிக்குள் தரப்பட்ட இரண்டு விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து, தெரிவு செய்த விடையை வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் எழுதுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி சரியான விடை அளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவில்லை.

இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்கு குறுகிய விடைகளை விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தை எழுதி அதன் எதிரே எழுதுமாறு கேட்கப்பட்டது.

**1.11** இவ்வினா, நிறுவனக் கட்டமைப்புகளின் இரண்டு வகைகளை நிரற்படுத்துமாறு கேட்டிருந்தது. இங்கு இரண்டு நிறுவனக் கட்டமைப்புகளின் பெயர்களை எழுதுவது போதுமானதாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இரண்டு நிறுவனக் கட்டமைப்புகளின் பெயர்களைச் சரியாக எழுதி, புள்ளிகளைப் பெற்றுக்கொண்டனர். வேறு சிலர் நிறுவனக் கட்டமைப்புகளை விளக்கி, நீண்ட விடைகளை எழுத முயற்சித்திருந்தனர்.

**1.12** இங்கு, சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் என்பதால் யாது கருதப்படுகிறது என்பதைச் சுருக்கமாக விபரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகளால் இதற்கான 2 புள்ளிகளையும் பெற்றுக்கொள்ள இயலவில்லை. இதற்கான காரணம், தேவையற்றவாறு சம்பந்தமற்ற விடயங்கள் எழுதப்பட்டமை ஆகும். ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே தெளிவாகவும் சரியாகவும் பதத்தை வரையறுத்து 2 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். இவ்வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டம் குறைந்த மட்டத்தில் அமைந்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

**1.13** உள்ளக ஆட்சேர்ப்புக் கொள்கையொன்றின் இரண்டு பிரதிகூலங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்ததை அவதானிக்க முடிந்தது. குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் தங்களது எடுகோள்களைப் பயன்படுத்தி ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயங்களை வழங்கியிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

**1.14** இங்கு, சந்தைப்படுத்தலில் பயன்படுத்தப்படும் இரண்டு விலையிடல் முறைகளை நிரற்படுத்துமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகளால் சந்தைப்படுத்தலின் இரண்டு விலையிடல் முறைகளை வெற்றிகரமாக நிரற்படுத்த முடியாத காரணத்தால் இதற்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளை அவர்களால் பெற முடியவில்லை. இவ்வினாவுக்கு பரீட்சார்த்திகள் குறைந்த மட்டத்திலேயே புள்ளிகளைப் பெற்றுக் கொண்டதை அவதானிக்க முடிந்தது.

**1.15** இவ்வினாவில் தந்திரோபாயக் கட்டுப்பாட்டிற்கும் செயற்பாட்டுக் கட்டுப்பாட்டிற்குமிடையிலான இரண்டு வேறுபாடுகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இவ்வினாவுக்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் அளித்த விடைகள் திருப்தியானதாக அமையாததால் அவர்கள் மிகவும் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்ததை அவதானிக்க முடிந்தது. மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே வெற்றிகரமாக விடையளித்து இதற்காக ஒதுக்கப்பட்டிருந்த புள்ளிகளைப் பெற்றுக் கொண்டனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

## <u>பகுதி B</u>

இப்பகுதி ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட மொத்தமாக 50 புள்ளிகளுக்காக 05 வினாக்களை உள்ளடக்கியிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளின் இவ்வினாவுக்கான செயலாற்றுகை மட்டம் திருப்திகரமானதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் சில வினாக்களுக்கு விடையெழுதாமல் விட்டிருந்ததுடன் சொற்பளவான பரீட்சார்த்திகள் சில வினாக்களுக்கு திருப்தியற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

### வினா இல. 02

இவ்வினா, திட்டமிடல் பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காக **(a), (b), (c)** என 3 பகுதிகளைக் கொண்டிருந்தது.

**(a)** இந்தப் பகுதியில், திட்டமிடல் செயன்முறையின் படிமுறைகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இங்கு திட்டமிடல் செயன்முறையின் படிமுறைகளை எழுதுமாறு மாத்திரமே கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமான விடைகளை அளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாது திட்டமிடல் செயன்முறைகளின் படிமுறைகளை ஒழுங்குமுறையின்றி எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் திட்டமிடல் படிமுறைகளாக தீர்மானமெடுத்தல் படிமுறைளை எழுதியிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. இது இலகுவாக புள்ளிகளைப் பெறக்கூடிய வினாவாக இருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் சரியான விடையின் நோக்கெல்லைக்கு அப்பால் விடைகளைச் சமர்ப்பித்திருந்த காரணத்தால் புள்ளிகளைப் பெறக்கூடிய வாய்ப்பினை இழந்திருந்தனர்.

**(b)** இந்தப் பகுதியில் திட்டமிடலுக்கான இரண்டு தடைகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கான விடைகளாக தேவையற்ற நீண்ட விடயங்களைச் சமர்ப்பித்திருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. ஒட்டுமொத்தத்தில் **பகுதி (b)** இற்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

**(c)** இந்தப் பகுதியில் தீர்மானமெடுக்கும்போது முகாமையாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய இரண்டு நிபந்தனைகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்த போதிலும், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது இந்தப் பகுதிக்கான செயலாற்றுகை திருப்திகரமானதாக இல்லை. புள்ளிகளைப் பெற்றுக்கொள்வது குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 03**

இது முகாமையின் தற்காலச் சூழல் மற்றும் நிறுவனக் கட்டுப்பாடு பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்கின்ற ஒரு வினாவாகும். இந்த வினாவுக்கு 10 புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இது **(a), (b), (c)** என்ற 3 பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**(a)** தற்கால இலங்கைச் சூழலில் முகாமையாளர்கள் எதிர்கொள்ளும் இரண்டு சவால்களை விபரிக்குமாறு இப்பகுதியில் கேட்கப்பட்டது. இதற்காக, சுருக்கமான விபரிப்புகளுடன் ஏதாவது இரண்டு தொடர்புடைய விடயங்களை குறிப்பிடுவது போதுமானதாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடைகளை அளித்து, புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் கொரோனா நோய்ப் பரவல் ஆகியன பற்றியும் அவை எவ்வாறு முகாமையாளர்களுக்கு சவால்மிக்கதாகவுள்ளது என்பது பற்றியும் தெளிவாக விளக்கியிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. ஆனால், வேறு சில பரீட்சார்த்திகள் சரியான விடைக்குச் சற்றும் பொருந்தாத விடைகளை எழுதியிருந்ததாலும் ஒரே விடயத்தை திரும்பத் திரும்பக் கூறியிருந்ததாலும் இந்தப் பகுதிக்கு குறைந்த புள்ளிகளையே பெற்றிருந்தனர். குறிப்பிட்ட சில வேறு பரீட்சார்த்திகள் பொருளாதாரம் தொடர்பான விடயங்களை சுருக்கமாகக்கூட விபரிக்காது மீளவும் எழுதியிருந்ததால் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

**(b)** இந்தப் பகுதியில் யப்பானிய முகாமைத்துவப் பாணிக்கும் மரபார்ந்த (மேற்கத்திய) முகாமைத்துவப் பாணிக்குமிடையிலான இரண்டு வேறுபாடுகளை இனங்காணுமாறு கேட்டிருந்தது. மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சார்த்திகள் மாத்திரமே திருப்திகரமான விடைகளை வழங்கி, புள்ளிகளைப் பெற்றிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் இரண்டு பாணிகளுக்குமிடையிலான வேறுபாட்டை இனங்கண்டிருக்கவில்லை என்பதுடன் திருப்திகரமான விடைகளை எழுதாததால் அவர்களால் புள்ளிகளையும் பெற முடியவில்லை. பெரும்பாலான பரீட்சார்த்திகள், யப்பானிய முகாமைத்துவப் பாணியின் பிரதான அம்சங்கள் பற்றிக்கூட தெரிந்து வைத்திருக்கவில்லை.

**(c)** நிறுவனமொன்றுக்கு கட்டுப்படுத்தல் ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு காரணங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பரீட்சார்த்திகள் முழுவதுமாக சரியான விடயங்களை வழங்கி யிருந்ததுடன் உயர்ந்தபட்ச புள்ளிகளையும் பெற்றிருந்தனர். வேறு சில பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளாது கட்டுப்பாட்டின் அம்சங்களை ஒவ்வொன்றாக விளக்கியிருந்தனர். வேறு சில பரீட்சார்த்திகளோ கட்டுப்படுத்தல் என்றால் என்ன என்பதை விபரிப்பதிலிருந்து தொடங்கி கட்டுப்படுத்தல் பற்றி அவர்களுக்குத் தெரிந்த அனைத்து விடயங்களையும் ஒரு பந்தி வடிவில் எழுதியிருந்தனர். கட்டுப்படுத்தல் முக்கியமானதாக இருப்பதற்கான காரணங்கள் பந்தியின் இறுதியில் உள்ளடக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் கவனம் செலுத்தாது இந்த வினாவுக்கு நீண்ட விடைகளை எழுதியதால் நேரத்தை வீணடித்ததுடன் ஏனைய வினாக்களுக்கு விடையளிப்பதற்கும் நேரம் போதாமல் இருந்தது.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 04**

இந்த வினா தொழிற்பாட்டு முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. இது **(a), (b)** என 2 பகுதிகளைக் கொண்டிருந்ததுடன் இதற்காக ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

**(a)** தொழிற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பில் சேவைத் துறையில் தொழிற்படும் நிறுவனமொன்று எதிர்கொள்ளும் மூன்று சிரமங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருக்கவில்லை. விடையளித்திருந்தவர்களில் அதிகமானோர் இவ்வினாவை விளங்கிக் கொண்டிருந்தவர்களாகத் தெரியவில்லை. குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக ஏற்படும் வாழ்வாதாரப் பிரச்சினைகள், போக்குவரத்துப் பிரச்சினைகள், சமூக இடைவெளியைப் பேணுதல் மற்றும் வீட்டிலிருந்து சேவைகளை வழங்குதல் போன்ற விடைகளை அளித்திருந்தனர். மேலும், சேவைத் துறைக்குப் பதிலாக உற்பத்தித் துறையால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளின் விளைவாக நிறுவனமொன்று எதிர்கொள்ளும் சிரமங்களைச் சிலர் குறிப்பிட்டிருந்தனர். இவை, பரீட்சார்த்திகளிடம் இவ்வினாவைப் பற்றிய விளக்கம் காணப்படாததையே காட்டுகிறது. இவ்வினாவுக்கான செயலாற்றுகை மோசமான மட்டத்தில் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

**(b)** சேவைத் துறையில் சிறந்த பெறுமதி சேர்த்தலுக்காக தொழிற்பாட்டு முகாமைத்துவத்தால் பின்பற்றப்படக்கூடிய நான்கு தந்திரோபாயங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு விடையளிப்பதில் வெற்றிகண்டிருந்தனர். அதிகமானவர்கள் வினைத்திறன் அதிகரிப்பு, பயனுறுதித்தன்மை, ஊழியர்களை ஊக்குவித்தல், அவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு மற்றும் அவர்களுடைய சேவை நிலையங்களுக்கான வசதிகள் போன்றவற்றை முன்மொழிந்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மோசமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 05**

மனித வள முகாமைத்துவம் (HRM) தொடர்பான அறிவைப் பரீட்சிப்பதற்காக இவ்வினா அமைக்கப்பட்டிருந்தது. இது **(a), (b)** என 2 பகுதிகளைக் கொண்டிருந்ததுடன் இதற்கு மொத்தமாக 10 புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

**(a)** தொழிலுக்கு அறிமுகப்படுத்தல் என்பது மனித வள முகாமைத்துவத் தொழிற்பாடாகக் கருதப்படுவதற்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முன்வரவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது. வினாவுக்கு விடையளித்திருந்தவர்கள்கூட முழுமையான புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் வினாவை விளங்கிக் கொள்ளாது விடையளித்திருந்ததுடன் அளிக்கப்பட்ட விடைகள் புள்ளிகளைப் பெற ஏற்புடையதாக இருக்கவில்லை. வேறு சில பரீட்சார்த்திகள் மனித வள முகாமைத்துவம் என்னும் பதத்தை விவரித்து, தொழிலுக்கு அறிமுகப்படுத்தலின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டியிருந்தனர். தொழிலுக்கு அறிமுகப்படுத்தல் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு போதியதாக இல்லை என்பதைக் காணக்கூடியதாக இருந்தது. மிகச் சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளே மனித வள முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாக தொழிலுக்கு அறிமுகப்படுத்தல் முக்கியத்துவம் பெறுவதைச் சுட்டிக்காட்டி, வினாவுக்குத் தெளிவாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், இந்த வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மோசமான மட்டத்தில் காணப்பட்டது என முடிவு செய்யலாம்.

**(b)** நிறுவனமொன்றுக்கு பயனுறுதிமிக்க தொடர்பாடல் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று காரணங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சில மட்டங்களில் விடைகளை அளித்திருந்தனர். இது புள்ளிகளை இலகுவாகப் பெறக்கூடிய வினாவாக இருந்தது.

ஆனால், சில பரீட்சார்த்திகள் விடயங்களை மாத்திரம் குறிப்பிட்டிருந்தனராயினும் விடயங்களை விபரிக்கத் தவறியிருந்தனர். பரீட்சார்த்திகள் இதற்கான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மோசமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 06**

இது முகாமைத்துவக் கோட்பாடுகள் தொடர்பான கோட்பாட்டு ரீதியான விடயங்கள் பற்றிய அறிவைப் பரீட்சித்த வினாவாகும். எப்போதும் மாறுகின்ற வணிகச் சூழலொன்றில் தலைமையானது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது இங்கு பரீட்சிக்கப்பட்டது. இந்த வினா அது தொடர்பான கோட்பாட்டு ரீதியான விடயங்களை வினவியதுடன் இது **(a), (b), (c)** என மூன்று பகுதிகளையும் 10 புள்ளிகளையும் கொண்டிருந்தது.

**(a)** இங்கு நிலைமாறு தலைமைத்துவத்தின் 3 கூறுகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இந்த வினாவுக்கு மிகவும் குறைந்த மட்டத்திலேயே சரியான விடைகள் அளிக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. இதற்கான காரணமாக, வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாமை காணப்படலாம். பல பரீட்சார்த்திகள் தலைமைத்துவத்தின் பண்புகளை விடையாக வழங்கி யிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தலைவர் ஒருவருக்கு இருக்க வேண்டிய தன்மைகள் போன்ற விடயங்களைக் குறிப்பிட்டிருந்தனர். ஆயினும், மிகவும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் நிலைமாறு தலைமைத்துவத்தின் கூறுகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

**(b)** இவ்வினாவில் மாற்றத்தின் தன்மைக்கு இணங்க, மாற்றத்தின் இரண்டு வகைகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. இதற்காக அளிக்கப்பட்ட விடைகள் ஓரளவு திருப்திகரமானதாக இருந்தன. மாற்றங்களை இனங்கண்டிருந்த போதிலும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் அந்த விடயங்களை விபரிக்கத் தவறியிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இந்தப் பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.

**(c)** நிறுவனமொன்றின் தந்திரோபாயத்தில் செல்வாக்குச் செலுத்தும் இரண்டு உள்ளகக் காரணிகளை விபரிக்குமாறு இவ்வினாவில் கேட்கப்பட்டது. மிகவும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே இதற்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர். பரீட்சார்த்திகளின் அறிவு மிகவும் கீழ் மட்டத்தில் இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி C

**வினா இல. 07**

இது ஒரு விடய ஆய்வு வினாவாகும். இதற்கென மொத்தமாக ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25 ஆகும். இங்கு தரப்பட்ட விவரணத்துடன் எவ்வாறு கோட்பாட்டு ரீதியான விடயங்களை பரீட்சார்த்திகள் தொடர்புபடுத்துகின்றனர் என்பது பரீட்சிக்கப்பட்டது. இவ்வினா **(a), (b), (c), (d)** மற்றும் **(e)** என 5 பகுதிகளைக் கொண்டது. இம்முறை தயாரிக்கப்பட்ட விடய ஆய்வு வினாவானது புள்ளிகளை இலகுவாகப் பெறக்கூடிய விதத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது.

**(a)** இந்த வினாவின் மூலம் வணிக நிறுவனமொன்றில் வெற்றியை ஈட்டுவதற்கு தலைவர் ஆற்ற வேண்டிய மூன்று முக்கிய தொழிற்பாடுகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. ஒரு இலகுவான விடய ஆய்வு வினாவாக இருப்பதால் பரீட்சார்த்திகளால் இலகுவாகப் புள்ளிகளைப் பெற்றுக் கொண்டிருக்க முடியும்.

இங்கு வெற்றிகரமான தலைவர் ஒருவரின் 3 தொழிற்பாடுகளைக் குறிப்பிட வேண்டி யிருந்ததுடன் அவற்றைத் தரப்பட்ட விவரணத்துடன் தொடர்புபடுத்தி விபரிக்கவும் வேண்டியிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். வேறு சில பரீட்சார்த்திகள் தலைவரால் ஆற்றப்பட வேண்டிய தொழிற்பாடுகளைக் குறிப்பிட்டிருந்தனர் எனினும் அவற்றை தரப்பட்ட விவரணத்துடன் தொடர்புபடுத்தவுமில்லை, விபரிக்கவுமில்லை.

**(b)** **அதீனா** போன்ற கல்வி நிறுவகமொன்றுக்கு டிஜிடல் சந்தைப்படுத்தலின் இரண்டு அனுகூலங்களையும் இரண்டு பிரதிகூலங்களையும் விபரிக்குமாறு இவ்வினாவில் கேட்கப்பட்டது. எந்தவொரு பரீட்சார்த்தியும் தற்போதைய உலகை விசாரணை மனப்பான்மையுடன் பார்ப்பார்களாயின், இது புள்ளிகளைப் பெறக்கூடிய இலகுவான வினா என்பதை அவர்களால் உணர்ந்து கொள்ள முடியும். குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிப்பதில் உயர்ந்த மட்ட செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருந்தனர். ஆனால், பெரும்பாலான பரீட்சார்த்திகள் விடயங்களைக் குறிப்பிட்டிருந்தனர் எனினும் ஒரு கையளவு பரீட்சார்த்திகள் மாத்திரமே அவற்றை விபரித்திருந்தனர்.

**(c)** முறையான மனித வளத் திட்டமிடலிலிருந்து **அதீனாவால்** அடைந்துகொள்ளக்கூடிய நான்கு நோக்கங்களைக் குறிப்பிடுமாறு இவ்வினாவில் கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் மனித வள முகாமைத்துவத்தின் நன்மைகளை நேரடியாகக் குறிப்பிட்டிருந்ததால், இந்தப் பகுதிக்கு உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(d)** தற்போதைய நிலைமையின் அடிப்படையில் **அதீனாவுக்கு** ஊழியர் ஒருவர் தெரிவுசெய்யப் படும்போது தவறான தெரிவுத் தீர்மானத்தால் ஏற்படக்கூடிய மூன்று பின்விளைவுகளை குறிப்பிடுமாறு இவ்வினாவில் கேட்கப்பட்டது. பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்கும் போது பின்விளைவுகளாக பல்வேறு நியாயமானளவு விடைகளை வழங்கியிருந்தனர்.

**(e)** இந்தப் பகுதியில் போட்டரின் ஜெனெற்றிக் தந்திரோபாயங்களுக்கு இணங்க, கோவிட் 19 இற்குப் பின்னரான சந்தை நிலைமையில் **அதீனா** பயன்படுத்தக்கூடிய பொருத்தமான தந்திரோ பாயத்தை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் அளிக்கப்பட்ட விடைகள் மிகவும் மோசமான மட்டத்தில் காணப்பட்டது. கோவிட் 19 இற்குப் பின்னரான சந்தை நிலைமையை தற்போதைய நிலைமைக்கு மாற்றியமைக்க பரீட்சார்த்திகள் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. பரீட்சார்த்திகள் அவர்களது சொந்த அனுமானங்களின் மீது சரியான விளக்கமின்றி பொருத்தமற்ற விடைகள் எழுதப்பட்ட பல சந்தர்ப்பங்களும் காணப்பட்டிருந்தன.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சாதாரண மட்டத்தில் காணப்பட்டது.**

------

**பரீட்சார்த்திகளின் புரிதல் மற்றும் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்:**

**(1)** பாடத்திட்டத்தை / பாடப்புத்தகத்தை நன்றாகக் கற்கவும்.

**(2)** வினாத்தாளைப் பெற்றதும் அதிலுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும் (இந்த நோக்கத்திற்காக மேலதிக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது).

**(3)** பரீட்சார்த்திகள் வினாவைப் பல தடவைகள் வாசித்து அதில் என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். நேரடியான விடையொன்று எதிர்பார்க்கப்படும் போது தேவையற்ற விவரிப்புகளையும் விபரங்களையும் எழுதுவதைத் தவிர்க்கவும்.

**(4)** விடைகள் ஒரே மொழியில் மாத்திரம் எழுதப்பட வேண்டும். அது நீங்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது குறிப்பிட்ட மொழியாக இருப்பதுடன் ஒவ்வொரு வினாவுக்குமான விடைகள் ஒரு புதிய பக்கத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

**(5)** பரீட்சையின்போது நேரத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்தவும்.

**(6)** விடைப்புத்தகத்தைக் கையளிப்பதற்கு முன்னர், சகல வினா இலக்கங்களும் உங்களுடைய சுட்டெண்ணும் சரியாக எழுதப்பட்டிருக்கிறதா என்பதை இருமுறை பரீட்சித்துக் கொள்ளவும்.

**(7)** ‘‘செயல் வினைச்சொல் செவ்வை நிரல்’’ வினாத்தாளின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் அந்த நிரலில் தரப்பட்ட வரைவிலக்கணங் களின் அடிப்படையில் விடையளித்தல் வேண்டும்.

**(8)** கையெழுத்து தெளிவாக இருப்பதையும் விடைகளுக்கான வினா இலக்கங்கள் சரியாக எழுதப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

**(9)** ஏஏரீ இனால் வெளியிடப்பட்ட சுய கற்றல் புத்தகம், கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகளை வாசிப்பது பயனுடையதாகும்.

**(10)** உங்களது அறிவை மேம்படுத்திக்கொள்ளும் பொருட்டு கடந்தகால வினாத்தாள்கள் மற்றும் முன்னோடிப வினாத்தாள்களுக்கு விடையெழுதிப் பயிற்சி பெறுவது சிறந்தது.

**(11)** பரீட்சையில் சித்தியடையும் உறுதியான நோக்கத்துடனும் நல்ல தயார்படுத்தலுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

-***-